# 25

## சபை:

# இதன் ஊழியம்

## சபைக்கு (கிடைத்துள்ள) ஈவுகள்

1. ***சபைக்குக் கிறிஸ்துவின் ஐந்து மடங்கு ஈவைக் குறிப்பிடவும் (எபே. 4:8-11).***
   அ. *அப்போஸ்தலர்கள் - கிறிஸ்துவைக் கண்ணால் கண்ட சாட்சியமாக அவரை வெளிப்படுத்த.*
   ஆ. *தீர்க்கதரிசிகள் - வெளிப்படுத்த மற்றும் போதிக்க.*
   இ. *சுவிசேஷகர்கள் - சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க.*
   ஈ. *மேய்ப்பர்கள் - மந்தையைக் கவனிக்க, போஷிக்க மற்றும் பாதுகாக்க.*
   உ. *போதகர்கள் - எல்லாக் காலத்திலும் அறிவுறுத்த.*
2. ***இந்த மனிதர்கள் யாவரிடமும் அற்புத வல்லமை எவ்வளவு காலம் இருக்க வேண்டியதாயிற்று (எபே. 4:13)?***
3. ***சபைக்கு இந்த வரங்கள் எதற்காகக் கொடுக்கப்பட்டன (எபே. 4:12-14)?***
   அ. *சபையில் இப்பொழுது நாம் எவ்விதக் கருத்தில் அப்போஸ்தலர்களைப் பெற்றுள்ளோம்?*
   *நியாயாதிபதிகள் என்ற வகையில், அவர்களின் சாட்சியமானது - கிறிஸ்தவர்களின் ஒரே வழிகாட்டி நூலான - புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.*
   ஆ. *சபைக்கு இந்த வரங்கள் இப்பொழுது எவ்விதத்தில் பயன் படுத்தப்பட முடியும் (2 தீமோ. 2:2, 15)?*

## பரிசுத்தவான்களுக்குப் பக்தி விருத்தி ஊட்ட

1. ***“பக்தி விருத்தியூட்டுதல்” என்பது எதை அர்த்தப்படுத்துகின்றது?***
   *கட்டியெழுப்ப, பலப்படுத்த.*
2. ***பக்தி விருத்தியூட்டப்பட்ட மனிதர்களின் குழு ஒன்றைக் குறிப்பிடுக (1 பேது. 5:1, 2).***
   அ. *அது எவ்வாறு செய்யப்பட்டது (1 தெச. 5:14, 15)?*
   ஆ. *புதிதாக மனம் மாறியவர்கள் எவ்விதத்தில் பக்தி விருத்தியூட்டப்பட வேண்டும் (அப். 14:22, 23; 15:41)?*
   இ. *முதல் சபை எவ்வாறு வளர்ந்தது (அப். 2:42)?*
      *(1.) எருசலேமில் இருந்த சபையின் மாபெரும் புத்தி கூறுபவராயிருந்தவர் யார் (அப். 4:36)?*

*(2.) அவர் எங்கு அனுப்பப்பட்டார்? அதினால் ஏற்பட்ட விளைவுகள் யாவை (அப். 11:22-24)?*

## குறைவுள்ளவர்களுக்கு உதவுதல்

1. ***முதல் சபையானது தனது ஏழைகளை எவ்வாறு கவனித்துக் கொண்டது (அப். 2:45; 4:32-35)?***
2. ***யூதேயாவில் இருந்த ஏழைகளுக்கு அந்தியோகியாவில் இருந்த சபை எவ்வாறு நிவாரணம் அளித்தது (அப். 11:29, 30)?***
3. ***குறைவுள்ளவர்களாய் இருந்த விதவைகளுக்கு தொற்காள் செய்தது என்ன (அப். 9:36-39)?***
4. ***புறஜாதியாருக்கான அப்போஸ்தலர் என்ற வகையில் பவுல் என்ன செய்தார் (கலா. 2:8, 10)?***
5. ***எபேசியர்கள் எதற்காக வேலை செய்ய வேண்டியிருந்தது (எபே. 4:28)?***
6. ***மாசில்லாத சுத்தமான பக்தி என்பது என்ன (யாக். 1:27)?***

## சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க - சுவிசேஷ ஊழியம்

1. ***சபை என்றால் என்ன (1 தீமோ. 3:15)?***
2. ***மத்தேயு சுவிசேஷத்தில் விவரிக்கப்பட்டுள்ள பிரதான கட்டளையைத் தருக (மத். 28:18-20). மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் இது பற்றிய பதிவைத் தருக (மாற். 15:16; லூக். 24:46-49).***
3. ***இந்த சுவிசேஷத்துவத்தின் ஒழுங்குமுறை என்னவாக இருந்தது (அப். 1:8)?***
4. ***(ஊழியத்திற்கு ஊழியர்களை) யார் அனுப்ப வேண்டியிருந்தது (அப். 13:1-3)?***
5. ***ரோமர் 10:14, 15ஐ மனப்பாடம் செய்யவும்.***
6. ***சுவிசேஷத்தைப் பரப்பும் மையமாக விளங்கிய சபை எது (அப். 14:26, 27)?***
7. ***(பிரதான) கட்டளையின் கீழ் தெசலோனிக்கே சபை எவ்வாறு செயல்பட்டது (1 தெச. 1:6-9)?***
8. ***பிலிப்பியர்கள் ஊழியர்களுக்கு எவ்வாறு ஆதரவு அளித்தார்கள் (பிலி. 4:14-16)?***
9. ***பிலிப்பிய சபைக்காகப் பவுல் தேவனுக்கு நன்றி செலுத்தியது ஏன் (பிலி. 1:3-5)?***
10. ***எந்த ஒரு சபையானது ஒரு ஊழிய மையமாக இராவிட்டால் அது ஒரு முன்மாதிரியாயிருக்க முடியுமா?***

## தனிநபர் ஊழியம்

1. ***முதல் சபையானது துன்புறத்தப்படுதலின் கீழ் எவ்வாறு செயல்பட்டது (அப். 8:1, 4)?***

2. அந்திரேயா கிறிஸ்துவிடத்தில் யாரை அழைத்து வந்தார் (யோவா. 1:40-42)?
3. பிலிப்பு யாரைத் தேடி கிறிஸ்துவிடம் அழைத்து வந்தார் (யோவா. 1:45-49)?
4. சுவிசேஷகரான பிலிப்பு எவ்வாறு சுவிசேஷ ஊழியம் செய்தார் (அப். 8:5, 12, 13)?
5. அப்போஸ்தலர்கள் தங்கள் பிரசங்கித்தலின் பெரும்பகுதியை எவ்வாறு செய்தனர் (அப். 5:42; 20:20)?
6. இழந்து போகப்பட்டவர்களை இரட்சிப்பதற்கு ஒருவர் எந்த அளவுக்குச் செல்ல வேண்டும் (1 கொரி. 9:20-23)?
7. விலங்கிடப்பட்ட நிலையில் பவுல் தம் காவலரை எவ்விதம் (நற்செய்தியினால்) அடைந்தார் (பிலி. 1:12, 13)?
8. பவுல் சிறையில் இருக்கையில் யாரை மனமாற்றம் அடையச் செய்தார் (பிலே. 10)?
9. கிறிஸ்தவர்கள் உலகத்திற்கு என்னவாக இருக்கின்றனர் (மத். 5:13, 14)?